**SC.NO. 94/2023** **Date: 25.03.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திரு.அரசு என்ற **Pw7** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachaiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திரு.அரசு
த/பெ – மதுரை
வயது – 37/2026
தொழில் – தனியார் நிறுவனத்தில் வேலை

**முதல் விசாரணை**

நான் தற்போது சுங்குவார்சத்திரத்தில் உள்ள பன்னூர் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த நபர் கோவிந்தன் என்பவர் என்னுடைய பெரியப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2023ல் நான் பன்னூர் சூசைபுரம் கிராமத்தில் எனது வீடு கட்டினேன். அதை ஹரிகிருஷ்ணன் (எ) கிருஷ்ணன் எனது அண்ணன் கட்டினார். அவர் மேஸ்திரி வேலை செய்து வந்தார். எனது வீடு கட்டுவதற்காக கடன் பெற்று கடன் வைத்திருந்தேன். அந்த பணத்தை எனது வீட்டில் வைத்திருந்தால் பாதுகாப்பு இல்லை என்பதற்காக எனது அண்ணன் கிருஷ்ணன் நீர்வள்ளூரில் வசித்து வருபவரிடம் சென்று பணத்தை கொடுப்பதற்காக ஒரு நாள் காலை 09.00 மணிக்கு அவர் வீட்டிற்கு சென்றேன். அப்போது அவர் வீட்டில் எனது பெரியப்பா கோவிந்தனிடம் கிருஷ்ணன் எங்கே என்று கேட்டேன். அவர் கிருஷ்ணன் ஏற்கனவே எனது கட்டிடத்தில் வேலை செய்யும் போது ஸ்லாப்பிலிருந்து கீழே

விழுந்து காலில் முறிவு ஏற்பட்டதால் வீட்டின் உள்ளே படுத்துக்கொண்டிருப்பதாக சொல்லி உள்ளே அனுப்பினார். அப்போது நான் சென்று எனது அண்ணன் கிருஷ்ணனை பார்க்கும் போது ஆஜர் எதிரியும் அவருடன் இருந்தார். நான் அவரிடம் கேட்டதற்கு ஆஜர் எதிரி நமக்கு தெரிந்தவர் தான் என்று சொன்னார். நான் கொண்டு சென்ற ரூ.4 லட்சம் பணத்தை எனது அண்ணன் கிருஷ்ணனிடம் எனது வீட்டில் வைப்பதற்கு பயமாக உள்ளதால் இந்த பணத்தை நீயே வைத்துக்கொண்டு எனது வீட்டை கட்டி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு பணத்தை அவரிடம் ஒப்படைத்துவிட்டு வந்தேன். நான் எண்ணி பார்க்க சொன்னேன், அவரால் நடந்து போகமுடியவில்லை என்பதால் அந்த பணத்தை அவருடைய படுக்கையின் தலைப்பகுதியின் அடியில் வைத்துக்கொண்டார். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு ஒரு வாரத்திற்கு பிறகு ஒரு நாள் இரவு 07.15 மணி போல் இருக்கும் எனது பெரியப்பா இறந்துவிட்டதாக கிருஷ்ணன் எனக்கு தகவல் சொன்னார். நான் அவரிடம் காலையில் வருவதாக சொன்னேன். எனது அண்ணன் கிருஷ்ணனுக்கு காலில் அடிப்பட்டு உள்ளதால் உடனே செல்லும்படி எனது மனைவி என்னிடம் கூறி அனுப்பி வைத்தார். நான் எனது அண்ணன் வீட்டிற்கு இரவு 08.00 மணிக்கு சென்றுவிட்டேன். அங்கு அந்த ஊர்காரர்கள், மகள்கள், பக்கத்து வீட்டு காரர்கள் ஆகியோர் அங்கு இருந்தார்கள். அப்போது சென்று எனது பெரியப்பாவை பார்க்கும் போது அவரது வாயிலிருந்து

நுரை வந்து மருந்து வாசனை அடித்ததால் எனது அண்ணனின் மகள்கள் சந்தேகப்பட்டு யாரும் அவரை தொடாதீர்கள் என்று சொன்னார்கள். அதன் பிறகு எனது அண்ணன் மகள் பவானி காவல் நிலையத்திற்கு இது குறித்து தகவல் சொன்னார். அதன் பிறகு அரை மணி நேரத்தில் போலிசார் அங்கு வந்தார்கள். அப்போது அங்கு இறந்த நபரை சென்று பார்த்தார்கள், அவரது கழுத்தில் கீறியது போல் இருந்தது. வீட்டிற்கு சென்று பார்த்த போது வீட்டிற்கு உள்ளே இருந்த கதவு மற்றும் பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவிலிருந்த பணம் மற்றும் நகைகள் காணாமல் போயிருந்தது. அதன் பிறகு வீட்டின் உள்ளே யாரும் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டு எனது பெரியப்பாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக எடுத்து சென்றுவிட்டார்கள். எனது அண்ணன் தான் பீரோவில் வைத்திருந்த பணம் மற்றும் நகைகள் யாரோ எடுத்து சென்றுவிட்டார்கள், எடுத்த நபரை கண்டுபிடித்து கூறினார். எனது அண்ணன் மகள் பவானி என்பவர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். கிருஷ்ணன் மற்றும் பவானி ஆகியோர் சேர்ந்து போலிசாரிடம் இது குறித்து புகார் கொடுத்தார்கள். அவர்கள் இரவு 09.00 மணிக்கே காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டார்கள். எனது அண்ணன் பிரேத பரிசோதனை செய்வதற்காக காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். மேலும் எனது அண்ணன் கிருஷ்ணன் நான் அவரிடம் பணம் கொடுக்கும் போது ஆஜர் எதிரி அப்போது இருந்ததால் அவர் எடுத்திருப்பாரோ என்று

சந்தேகத்துடன் என்னிடம் கூறினார். அதனால் நானும் விஜயன் என்பவரும் எனது அண்ணன் சொன்ன ஆஜர் எதிரியின் ஊருக்கு சென்று ஆஜர் எதிரியை விசாரிக்க காலை சுமார் 09.00 மணிக்கு சென்றோம். ஊர் பேர் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஊருக்கு சென்று விசாரித்துக் கொண்டிருந்தோம். அப்போது மதியம் 02.00 மணி இருக்கும். ஆஜர் எதிரியை 4 அல்லது 5 போலிசார் அந்த ஊரில் உள்ள சீரகம் என்பவரின் வீட்டின் முன்பாக பிடித்து வைத்துக் கொண்டிருந்தார்கள். போலிசாரை பார்த்து நாங்கள் சற்று தூரமாக நின்றோம். ஆனால் விஜயன் என்பவர் அங்கு சென்று பார்க்கலாம் என்று சொன்னார். நாங்கள் சென்று பார்த்தோம். ஆஜர் எதிரியை ஏற்கனவே பார்த்ததாக சொல்லி அங்கு சென்று பார்த்தோம். நான் எனது அண்ணனுக்கு போன் செய்து பணம் கொடுக்கும் போது ஆஜர் எதிரியை இருந்தவரை போலிசார் பிடித்து விசாரணை செய்வதாக தகவல் சொன்னேன். அவர் அங்கேயே இருந்து என்ன நடக்கிறது என்று பார்க்க சொன்னார். அப்போது போலிசார் என்னிடம் எனது பெரியப்பா கோவிந்தனின் கொலை வழக்கில் ஆஜர் எதிரிதான் சம்பந்தப்பட்டுள்ளதாக சொன்னார்கள். ஆஜர் எதிரியை போலிசார் விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னையும் விஜயன் என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி போலிசார் கேட்டுக்கொண்டார்கள். ஆஜர் எதிரி கொடுத்த வாக்குமூலத்தை

போலிசார் கொண்டுவந்திருந்த கணினியில் தட்டச்சு செய்து அதில் எங்களை சாட்சியாக கையொப்பம் செய்யும் படி கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆஜர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்ன செய்தாய், நகைகளை எங்கு வைத்துள்ளாய் என்று ஆஜர் எதிரியிடம் போலிசார் கேட்டார்கள். அப்போது அங்கிருந்த சீரகம் என்பவரின் கட்டி முடிக்கபடாத வீட்டின் லேப்டில் நகையும் பணமும் வைத்திருப்பதாக கூறி எடுத்து போலிசாரிடம் ஆஜர் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் விஜயன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு போலிசார் என்ன என்ன வைத்துள்ளாய் என்று எதிரியிடம் கேட்டார். ஆஜர் எதிரி பீரோவை உடைத்த ராடை அந்த வீட்டின் அருகில் போட்டு வைத்திருந்தார். வீட்டின் வெளியே ஸ்பெலன்டர் பிளஸ் மோட்டார் சைக்கிள் ஒன்று இருந்தது. மேற்படி ராடு மற்றும் ஸ்பெலன்டர் பிளஸ் மோட்டார் சைக்கிளை போலிசாரிடம் எதிரி ஒப்படைத்தார். அதை போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அதில் நானும் விஜயன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல்

மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கிருஷ்ணன் என்பவர் என்னுடைய உறவினர் என்றால் சரிதான். நான் போவதற்குள் எதிரியை போலிசார் கைது செய்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் போவதற்கு முன்பு எதிரியிடமிருந்து என்ன எழுதி வாங்கியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் எதிரியிடம் என்ன எழுதி வாங்கியிருப்பதை காவல் நிலையத்திற்கு சென்று பிரின்ட்அவுட் எடுத்த பிறகு என்னிடம் கையெழுத்து வாங்கினாரா என்றால் லேப்டாப்பில் தட்டச்சு செய்து பக்கத்திலிருந்த இடத்திற்கு சென்று பிரின்ட்அவுட் எடுத்து வந்து நாங்கள் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியிருக்கிறோம் இதில் கையெழுத்து செய்யுங்கள் என்று கூறி கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் எந்த கடையிலிருந்து பிரின்ட்அவுட் எடுத்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் எதிரியிடமிருந்து ரூ.4 லட்சம் பணம் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். நான் கூறுவது போல எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் எங்கள் முன்னிலையில் எந்த ஒரு வழக்கு சொத்தும்

கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்தற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)